**Press release no. 545** **dt 8.7.08**

**செய்தி வெளியீடு**

**பஞ்சாப் மாநில உணவு மற்றும் விநியோகத் துறை அமைச்சர் திரு.ஆதேஷ் ப்ரதாப் சிங் அவர்களுடன் தமிழக உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் சந்திப்பு**

. . . . . . . . . .

பஞ்சாப் மாநிலத்தின் உணவு மற்றும் விநியோகத் துறை அமைச்சர் திரு.ஆதேஷ் ப்ரதாப் சிங் மற்றும் உணவு மற்றும் விநியோகத் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. ஆர்.பி.எஸ். பவார் ஆகியோர் மாண்புமிகு தமிழக உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களை சென்னையில் 08.07.2008 அன்று பிற்பகல் 1.00 மணிக்கு சந்தித்து தமிழகத்திற்கு கோதுமை வழங்குவது குறித்து விவாதித்தார்கள்.

சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ரவா, மைதா போன்றவற்றை தொடர்ந்து வழங்குவதற்கு தேவையான கோதுமையை வெளிச்சந்தையில் வாங்கி தமிழகத்திலுள்ள அரவை ஆலைகளின் மூலம் ரவா, மைதாவாக மாற்றி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்கு தேவையான கோதுமையை வழங்குவது தொடர்பாக பஞ்சாப் மாநிலத்தின் உணவு மற்றும் விநியோகத் துறை அமைச்சர் திரு.ஆதேஷ் ப்ரதாப் சிங், உணவு மற்றும் விநியோகத் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. ஆர்.பி.எஸ். பவார் ஆகியோர் மாண்புமிகு தமிழக உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களுடன் விவாதித்தார்கள்.

சந்திப்பின் போது திரு. க. சண்முகம், இ.ஆ.ப., அரசு செயலளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. க. இராஜாராமன், இ.ஆ.ப., ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மற்றும் திரு.க. பனிந்திர ரெட்டி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியோர் உடனிருந்தனர்.

**********

**Issued by:**

**DIPR , Chennai – 9.**